ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2059/33 - 2018 පෙබරවාරි මස 21 වැනි බදාදා - 2018.02.21

2059/33 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: KDS/TUM/04/01/01/01.

பொது விடயத்துக்குத் தேவையான கீழ் குறிப்பிடப்படும் காணியை/உரித்தினை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியுள்ளதனால், 1964 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

**பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் காணியின் விபரங்கள் :**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், தும்பனே கலகெதர பிரதேச செயலகப் பிரிவில், உடபலாத்த கோரளையில் கிழக்கு சிறு பிரிவின், ஹத்தாப்பிட்டிய கிராம உத்தயோகத்தர் பிரிவின், மடவல கிராமத்தில் அமைந்துள்ள கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட இறுதி கிராம 133/18/20 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப் பட்டுள்ள காணித் துண்டு (2) இரண்டிற்கான எல்லைகள்:

**துண்டு இலக்கம் 646**

காணியின்பெயர்: கல்கெட்டியவத்த; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: டீ. எம். டீ. பீ. தசனாயக்க.

**துண்டு இலக்கம் 647**

காணியின்பெயர்: கல்கெட்டியவத்த; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: வணக்கத்துக்குரிய அந்தரவெவே பியரத்தன தேரர் அவர்கள்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஏப்பிரல் 24 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு தும்பனே பிரதேச செயலகத்தில் என்னை சந்தித்தல் வேண்டும்.

மேலும் 2018 ஏப்பிரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த காணிகள் தொடர்பில் அவர்களின் உரிமை களின் தன்மைகள் மேற்குறித்த காணியைப் பெற்றுக் கொள்வதற்கான நட்டஈடு வேண்டுவதற்கு இருக்

கின்ற விடயங்கள் சம்பந்தமாக விபரங்களையும் நட்டஈட்டுத் தொகை மற்றும் அத்தொகையை கணக்கிட்ட விதம் போன்றவற்றினையும் எனக்கு இரண்டு பிரதிகளைக்கொண்ட ஆவணத்தின் மூலம் அறியத்தருதல் வேண்டும்.

துசிதா என். டப்ளியூ. ரணசிங்க,
பிரதேச செயலாளர்,
தும்பனே.

பிரதேச செயலகம்,
தும்பனே,
2018, பெப்புருவரி 16.

3 - 358

---

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இலக்கம்: MTR/LND/ACQVI/L2/3968

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்டவாரான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :-**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின், ஹத்தெடிய மத்திய கிராமத்தில் அமைந்தள்ளதும், முற் பிரதிப்பட இலக்கம் 2722 படத்தில், துண்டு இலக்கம் 10 தொடக்கம் 02 வரை மேற்குறித்த காணி ஹித்தெடிய மெதகெதர வத்த வீதியை விஸ்தரிப்புச் செய்வதற்கு எடுத்துக் கொள்ள உத்தேசித்துள்ளது.

01. **துண்டு இலக்கம் 01**
காணியின் பெயர்: ரதுராலகே வத்த மற்றும் அம்பிட்டியவத்த அல்லது கோன்கஹேன; காணியின் விபரம்: கலப்புப் பயிர் செய்கையைக்கொண்டது; ஆரம்ப உரிமையாளர்: மாத்தறை ஹித்தெடிமெத டி. டி. தஹநாயக்க மாவத்தை இலக்கம் 88 இல் வசிக்கும் ஹேவா நலகமகெ நிசான்த பிரிய; விஸ்தீரணம்: 0.0038 ஹெக்டயார்.

02. **துண்டு இலக்கம் 02**
காணியின் பெயர்: படுவிடகேவத்த; காணியின் விபரம்: கலப்புப் பயிர் செய்கையைக் கொண்டது; காணியின் ஆரம்ப உரிமையாளர்: மாத்தறை ஹித்தெடிமெத டி. டி. தஹநாயக்க மாவத்தை இலக்கம் 88 இல் வசிக்கும் அமரசிங்க திஸாநாயக்க; விஸ்தீரணம் : 0.0029 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாத்தறை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதி களாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. டி.கே. விக்ரமஆரச்சி,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

பிரதேச செயலகம்,
மாத்தறை,
2018, பெப்புருவரி 15.

3 - 359

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.